Registered as a magazine in Sri Lanka

# நிமிர்வு

ISSN 2579-2113

அரசியல் சமூக பொருளாதார செயற்பாட்டிதழ்

facebook.com/nimirvu youtube.com/nimirvu www.nimirvu.org

பார்வை-66 ஆடி, 2023 பக்கங்கள்-20 விலை - ரூபா 20.00




# வெறும் கறுப்பு யூலை அல்ல
# தமிழினப் படுகொலை யூலை





- சிறீமா–சாஸ்திரி ஒப்பந்தமும் ஒரு இனவழிப்பு தான்
- உள்நாட்டு கடன் மறுசீரமைப்பால் பறிக்கப்படும் உடைமைகள்
- சிறுதானிய விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் இடையே இணைப்பை ஏற்படுத்துவதே முதன்மையானது

ஆய்வு–அறிவு–நிமிர்வு

# சிறுதானிய விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் இடையே இணைப்பை ஏற்படுத்துவதே முதன்மையானது

தொகுப்பு - ரஜீந்தினி




சிறுதானிய உணவுகளை ஊக்குவிக்கும் கண்காட்சி ஒன்று கடந்த 15.06.2023 அன்று திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது. அங்கே பல்வேறு சிறுதானியங்களில் இருந்து செய்யப்பட்ட ஏராளமான ஆரோக்கிய உணவுகள் காட்சிப்படுத்தப்பட்டு இருந்தன. அதில் முக்கியமாக சிறார்களும் விரும்பும் வகையில் அவர்களுக்கு ஏற்ற மாதிரியான சிறுதானிய உணவுகளையும் சமைத்திருந்தார்கள். கம்பு, குரக்கன், சாமை, தினை, வரகு, இறுங்கு போன்ற சிறுதானியங்களின் பயிர்ச்செய்கை தொடர்பாகவும் அவற்றை எவ்வாறு பதப்படுத்தி மாவாக்குவது அதிலிருந்து எவ்வாறான உணவு பதார்த்தங்களை உருவாக்கலாம் என்பது தொடர்பாகவும் செய்முறையுடன் கூடிய ஒரு கண்காட்சியாக அது ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

இந்தக் கண்காட்சியில் 60 இற்கும் மேற்பட்ட உணவு வகைகளும் அவற்றுக்கான செய்முறைகளும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

குறிப்பாக, தினை, சாமை போன்ற பயிர்களில் விதைகளில் இருந்து கோது அகற்றுவது மிகவும் கடினமான செயற்பாடாக காணப்பட்டது. ஆரம்ப காலத்தில் குரக்கனிலும் இதே பிரச்சனை இருந்தது. ஆனால் இப்பொழுது அதனை இலகுவாக ஆலையில் கொடுத்தே கோது அகற்ற முடிகிறது. அதேபோல இந்த சிறுதானியங்களிலும் கோது அகற்ற கூடிய செயற்பாடானது காணப்படுகிறது. மற்றும் சிறுதானியங்களை பதப்படுத்தியதன் பின்பும் அதிலிருந்து எவ்வாறு உணவு தயாரிப்பது என்பதுவும் கேள்விக்குரிய விடயம் தான். இப்பொழுது இருக்கின்ற இளம் சமுதாயத்தினர் இவற்றை எல்லாம் அறிந்திருக்கிறார்களா என்பது கூட தெரியவில்லை. பலகார வகைகளையும் சிறு தானியங்களில் இருந்து செய்ய கூடியதாக இருக்கிறது. அதற்கு மேலதிகமாக மிகவும் சுவையான ஏராளமான உணவு பதார்த்தங்களையும் செய்ய கூடியதாக இருக்கிறது.

இவ்வாறான நிகழ்வுகளை செய்வதன் ஊடாக இன்றைய சமுதாயத்திற்கு இவற்றை தெரியப்படுத்தலாம். எல்லாவிதமான சிறுதானியங்களையும் பயன்படுத்தி செய்யப்பட்ட சிறுதானிய அடை, சிறுதானிய கூழ், சிறுதானிய கலவை பொரி, சிறுதானிய சத்துமா என பல வகையான உணவுகள் அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இவை சிறுவர்களுக்கு அதிகளவு சத்து வாய்ந்த உணவாக காணப்படுகின்றன. நீரிழிவு நோயாளர்கள், இரத்த கொழுப்பு பிரச்சனை உடையவர்களுக்கு சிறுதானிய உணவு பரிந்துரைக்கப்படுகிறது. அதாவது உடலில் இருக்கின்ற பிரச்சனையை நீக்குவதற்கு சிறுதானியம் உதவுகிறது. கொழுப்பினை குறைக்கவும், இதய பிரச்சனை எல்லாவற்றையும் சீராக்கவும் உதவும்.

“சிறுதானியங்களை கொள்வனவு செய்வதற்கு ஆட்கள் இருந்த போதும் அதனை சந்தையில் பெற்றுக் கொள்வது மிகவும் கடினமானதாக இருக்கிறது. ஏனென்றால் எல்லா கடைகளிலும்

ஐக்கியநாடுகள் சபையின் உலக உணவு விவசாய நிறுவனம் 2023 சிறுதானிய ஊக்குவிப்பு ஆண்டாக பிரகடனப்படுத்தி உள்ளது விவசாய திணைக்களத்தின் கீழ் இயங்கும் அம்மாச்சி உணவகத்தில் இச் சிறுதானிய உற்பத்தி பொருட்களை தொடர்ச்சியாக விசேட உணவாக பெற்றுக்கொள்ள முடியும்

சிறுதானியங்கள் கிடைப்பதில்லை. உற்பத்தி செய்பவர்களையும் வாங்குபவர்களையும் எளிய முறையில் தொடர்புபடுத்துவதனை தான் நாங்கள் செய்து கொண்டிருக்கின்றோம். உற்பத்தியாளர்களிடமிருந்து எடுத்து அவற்றை சரியான முறையில் தூய்மைப்படுத்தி பொதி செய்து சந்தைப்படுத்துகின்ற ஒரு பணியை நாங்கள் கொண்டிருக்கிறோம்." இந்நிகழ்வில் கலந்து கொண்ட பல்லுயிர் தனியார் நிறுவன இளைஞர் இவ்வாறாக தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இயற்கையில் திடீரென மழை பெய்வது கடும் வரட்சி என காலநிலை சவால்களை சந்தித்து கொண்டிருக்கிறோம். எப்படியும் மனிதனுக்கு உணவு தேவை. அந்த சந்தர்ப்பத்தில் உணவு உற்பத்திக்கு சிறுதானியம் தான் சரியான ஒரு வழி. அரிசியும் கோதுமையும் பயன்பாட்டிற்கு வருவதற்கு எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிறுதானியங்கள் பயன்பாட்டில் இருந்திருக்கின்றன. மனிதன் நாடோடி வாழ்க்கையை வாழும் போது கையில் சிறுதானியங்கள் தான் இருந்தன. இவை உடல் உழைப்பு பெரிதாக தேவையில்லாமல் உற்பத்தி செய்து கொள்ளக் கூடிய உணவுகளாக உள்ளன. சிறிதளவு சாப்பிட்டாலும் நார்ச்சத்து கூடுதலாக இருக்கின்ற காரணத்தினால் அதிகளவு சக்தியை கொடுக்கும்."

"எமது முன்னோர்கள் உடல் வலிமையாகவும் ஆரோக்கியமாகவும் பலமாக வேலையை செய்யக் கூடியவர்களாகவும் இருந்ததற்கு காரணம் சிறுதானியம் தான். ஆனால் நாங்கள் அவற்றை விட்டுவிட்டு அரிசிக்கும் கோதுமை மாவிற்கும் அடிமைப்பட்டதால் எங்களுடைய உடலில் ஆரோக்கியம் இல்லாதவர்களாக மாறி விட்டோம். எல்லாவற்றுக்கும் காரணம் எங்களுடைய உணவு பழக்கவழக்கம் தான். நீர் பிரச்சனையான இடங்களிலும் செய்வதற்கு ஏற்ற விவசாயமாக சிறுதானியம் இருக்கிறது. நீரை கொஞ்சமாக எடுத்து கொண்டு உற்பத்தியில் விளைச்சலை அதிகளவாக வழங்குவது சிறுதானியங்கள். வரகு, கம்பு, இறுங்கு, சாமை, தினை, கொள்ளு இவ்வாறாக எல்லாமே குறைந்தளவு நீரில் கூடியளவு விளைச்சலை தரக் கூடியவை."

"இங்கு சிறுதானியத்தை சந்தைப்படுத்துவதற்கான ஒரு காட்சி கூடத்தை செய்திருக்கிறோம். விவசாயிகள் உற்பத்தியை பெரியளவில் செய்தாலும் அதனை மக்களிடத்தில் கொண்டு சேர்ப்பதில் பெரிய சிரமத்தை எதிர் நோக்குகின்றனர். அதேசமயம் அதற்கான சரியான நியாயமான விலையும் கிடைப்பதில்லை. இவற்றை நிவர்த்தி செய்வதற்காக தான் எங்களுடைய ஒரு அலகாக இந்த செயற்பாட்டை தொடங்கி இருக்கிறோம். ஆகவே இது நுகர்வோரையும் விவசாயிகளையும் இணைப்பதற்கான ஒரு முயற்சியாகும். சில விவசாயிகள் அதை பயிரிடுவது என்றால் கூட அவர்களிடம் விதை இல்லை. விதை அழிந்து விட்டது. ஆகவே விதைகளையும் விவசாயிகளுக்கு கொடுத்து அவர்களை ஊக்கப்படுத்தி அந்த விவசாயிகளிடத்தில் இருந்து நாங்களே முழு தானியத்தையும் நியாயமான விலையில் பெற்று கொள்வதற்கு முதற்கட்ட நடவடிக்கை நடந்து கொண்டிருக்கிறது."

யாழ் மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தின் பண்ணை முகாமையாளர் கருத்து தெரிவிக்கையில், "சிறுதானிய செய்கையை ஊக்குவிக்கும் முகமாக இதனை செய்து கொண்டிருக்கின்றோம். சிறுதானியங்களை எவ்வாறு பயிரிடலாம், நோய் தாக்கங்களை எவ்வாறு கையாளலாம், எவ்வாறு அறுவடை செய்யலாம், மற்றும் சிறுதானியங்களில் இருந்து பெறுமதி சேர் உணவுகளை எவ்வாறு உற்பத்தி செய்யலாம் என்பன பற்றியும் விளக்கங்களை அளித்து கொண்டிருக்கின்றோம். சிறுதானியங்களை எடுத்து கொண்டால் நோய் தாக்கம் குறைவு. ஆனால் பிரதான பிரச்சனையாக பறவைகளின் தாக்கம் தான் இருந்தது. அதற்கும் பொறிமுறையாக வெவ்வேறு சத்தத்தை எழுப்ப கூடிய உபகரணத்தை நாங்கள் பயன்படுத்தி உள்ளோம். இதனையும் பார்வையிடுவதற்கான ஆயத்தங்களை செய்து வைத்திருக்கிறோம். விவசாயிகள் இதனை பார்த்து பயனடைந்து உள்ளார்கள்." என்று தெரிவித்தார்.

தமிழ் ஊடகத் திரட்டு,
லக்சுமி கட்டிடம்,
ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

நிமிர்வு

மின்னஞ்சல்: nimirvueditor@gmail.com
இணையம்: www.nimirvu.org
தொலைபேசி இல: 0212232121

## ஆசிரியர் பார்வை

# கறுப்பு யூலையும் 13 ஆவது திருத்த சட்டமும்

1983 ஆம் ஆண்டு ஆடி மாதம் இலங்கைத் தமிழர் மீது ஜே.ஆர் ஜெயவர்த்தன தலைமையிலான சிங்கள அரசினால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இனவழிப்பான ஆடிக்கலவரத்தின் 40 ஆண்டுகள் நிறைவு தினம் இந்த முறை தமிழ் மக்கள் வாழும் தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் உணர் வெழுச்சியுடன் இடம்பெற்றது. சிறிலங்காவின் பல்வேறு பிரதேசங்களில் வாழ்ந்த இனக் கலவரத்தினால் கடுமையாக பாதிப்புற்ற தமிழ் மக்கள் கப்பல்களிலும், விமானங்களிலும் வடக்கு கிழக்கு பிரதேசங்க ளுக்கு வந்து சேர்ந்தார்கள். அதன்மூலம் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பானது வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் என்பது மீளவும் உறுதிப்படுத்தப்பட்டது. ஒரே நாட்டுக்குள் தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் இணைந்து வாழ முடியாது என்பதை மீளவும் உறுதிப்படுத்திய நிகழ்வே 1983 ஆடிக் கலவரம்.

இலங்கை தமிழ் மக்கள் நீண்ட காலமாக தேசம் அல்லது தேசிய இனமாக வாழ்ந்து வரு கின்றனர். இவ்வாறு தேசம் அல்லது தேசிய இனமாக வாழ்ந்து வருதல் அழிக்கப்படுவது தான் இனப் பிரச்சினையாகும். ஒரு தேசத்தை அல்லது தேசிய இனத்தைத் தாங்கும் தூண்களாக இருப்பவை நிலம், மொழி, பொருளாதாரம், கலாசாரம் என்பனவையே. இவற்றுடன் மக்கள் கூட்டத்தையும் சேர்த்துக் கொள்ளலாம். இவை அழிக்கப்படுவதுதான் இனப்பிரச்சினையாகும். ஒரு இனத்தை அழிக்க வேண்டு மானால் அந்த இனத்தின் பூர்வீக நிலத்தை அழித்தால், அந்த இனம் பேசும் மொழியை அழித்தால், அந்த இனத்திற்கு வாழ்வாதாரமாக இருக்கின்ற பொருளாதாரத்தை அழித்தால் அந்த இனத்தை ஒன் றிணைக்கின்ற கலாசாரத்தை அழித்தால், அந்த இனம் அடையாளப்படுத்தும் மக்கள் கூட்டத்தை கொத்து கொத்தாக கொலை செய்தால் அந்த இனம் அழியும்.

இலங்கையின் வரலாற்று ரீதியாகவே இந்தத் தூண்கள் அழிக்கப்படுகின்றன. தமிழ் மக்களின் இதுவரை காலப் போராட்டம் என்பது இத்தூண்கள் அழிக்கப்படுவதைத் தடுக்கின்ற தற்காப்புப் போராட் டமே. இப்போராட்டம் அரசியல் வழி, ஆயுதவழி என அறுபது வருடங்களுக்கு மேலாக தொடர்கின்றது. 1983 இவ்வழிப்பை தொடர்ந்து 1987 இல் தமிழ் மக்களின் முழுமையான ஒப்புதலில்லாமல் தமிழ் மக்கள் தங்களை தாங்களே காத்துக் கொள்ளக் கூடிய அதிகாரங்களும் இல்லாமல் இலங்கை அர சும் இந்திய அரசும் ஏற்படுத்திக் கொண்ட 13 ஆவது திருத்த சட்டம் இன்றும் பேசு பொருளாக இருக் கிறது. இலங்கை ஒற்றையாட்சி அரசின் கீழ் சரியான அதிகாரப் பகிர்வில்லாமல் அரைகுறையான தீர் வுடன் உள்ள 13 ஆவது திருத்தமும் அதனை தொடர்ந்து கொண்டு வரப்பட்ட மாகாண சபை முறை மையும் தங்களுக்கு உரிய தீர்வல்ல என்பதை தமிழ் மக்கள் அரசியல் வழிமுறை மூலமும் ஆயுதப் போராட்டம் மூலமும் தெளிவாக எடுத்துரைத்துள்ளனர்.

தமிழ் மக்களிடம் வாக்கு கேட்டு செல்லும் போது மட்டும் சமஷ்டி அல்லது அதற்கு கூடிய தீர்வு வழங்கப்பட வேண்டும் என கேட்கும் தமிழ்க் கட்சிகள் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் மட்டும் 13 பிளஸ் மைனஸ் என கதைத்துக் கொண்டிருப்பதன் அர்த்தம் என்ன? தமிழ் மக்கள் இந்த நாட்டில் கௌரவமாக வாழ உச்சபட்ச தீர்வு எது வேண்டுமோ அதனை முன்வைத்து அதில் உறுதியாக நிற்பதனை விட்டுவிட்டு சிங்கள இந்திய அரசுகளின் பொம்மையாக எமது தலைவர்கள் ஏன் இயங்க வேண்டும்?

இன்று சிங்கள அரசுக்கு தமிழ் மக்களின் பிரச்சனையை தீர்க்க தாம் முயற்சி எடுக்கிறோம் என் பதைக் காண்பித்து சர்வதேச நாணய நிதியம் போன்ற சர்வதேச நிதி நிறுவனங்களிடம் கடன் பெற் றுக் கொள்ள வேண்டிய தேவைகள் உள்ளன. அதற்கு எம் அரசியல் தலைவர்கள் பலிக்கடாவாகி உள்ளனர் என்பது தான் உண்மை. இந்திய இலங்கை அரசுகள் தமிழ் மக்களை ஏமாற்ற காலாகாலமாக ஒரு பொறியாக 13 ஐ வைத்துள்ளனர். தமிழ்த் தலைமைகளும் இந்த பொறிக்குள் சிக்கி 13 ஐ வைத்துக் கொண்டு தமிழ் மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்துகின்றனர். தமிழ் மக்கள் இந்த வாதப் பிரதிவாதங்களுக்குள் அகப்படாமல் தங்கள் இலக்கு நோக்கி உறுதியுடன் பயணிப்பதே நல்லது.

-செ. கிரிசாந்-

# வெறும் கறுப்பு யூலை அல்ல தமிழினப் படுகொலை யூலை



தொகுப்பு - அமுது

ஈழத்தமிழர்களை தேடித் தேடி கொத்துக் கொத்தாக கொன்றழித்த 1983 ஆம் ஆண்டு ஆடிக்கலவரம் இடம்பெற்று நாற்பது ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. 5000 க்கும் மேற்பட்ட தமிழ் மக்களின் உயிர்களும் அவர்களின் பலகோடி சொத்துக்களும் தீயிட்டு அழிக்கப்பட்டன. அதுவே பின்னாளில் துயர் தோய்ந்த கறுப்பு யூலை என அழைக்கப்பட்டது. அதன் 40 ஆண்டு நினைவு நிகழ்வுகள் தாயகம் மற்றும் உலகமெங்கும் உணர்வு பூர்வமாக இடம்பெற்றன. கறுப்பு யூலை நினைவலைகள் தொடர்பில் ஈழத்தின் மூத்த அரசியல்வாதியான சிவாஜிலிங்கம் அவர்கள் பல்வேறு தகவல்களையும் பகிர்ந்து கொண்டார்.

ஈழத்தமிழர்கள் மீது 1983 ஆம் ஆண்டிலே இலங்கையிலே மிகக் கொடூரமாக படுகொலைகள் ஆரம்பித்த நாள் யூலை 24 ஆம் திகதி. 23 கறுப்பு யூலை என்பது இரத்த யூலையாக இனப்படுகொலை யூலையாக இருந்திருக்க வேண்டும். இந்த சூழ்நிலையின் பின்னணியில் தான் 5000 ற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் இங்கு படுகொலை செய்யப்பட்டார்கள். கொழும்பு வெலிக்கடை சிறையிலே தலைவர்கள் தங்கதுரை, குட்டிமணி, ஜெகன் கலாநிதி இராஜசுந்தரம் போன்றவர்கள் கொல்லப்பட்ட அந்த சூழ்நிலையிலே கொழும்பு நகரிலும் பல இடங்களில் வாக்காளர் இடாப்புகளை வைத்து கொண்டு தேடி தேடி தான் தமிழர்களை கொன்றழித்தார்கள். நூற்றுக்கணக்கான பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார்கள். பல்லாயிரக்கணக்கான வீடுகள் அழிக்கப்பட்டன. கட்டடங்கள் நொறுக்கப்பட்டன. தமிழர்கள் தேடி தேடி அழிக்கப்பட்டார்கள். இவ்வாறாக படுகொலைகளை மிக அவலமான நிலைமைகளை சந்தித்த எங்கள் மக்களை விமானங்கள் மூலமும் கப்பல்கள் மூலமும் பேரூந்துகள் மூலமும் புகையிரதங்கள் மூலமும் வடக்குக்கு அனுப்பினார்கள். இவ்வாறு தான் தமிழ் மக்கள் பாதுகாப்பாக உணரும் பிரதேசம் தாயகம் என்பது அங்கே உறுதிப்படுத்தப்பட்டது. ஆகவே இந்த பின்னணியில் தான் நாங்கள் இதை பார்க்க வேண்டும்.

இந்த படுகொலையை அன்றைய இந்திய பிரதமர் அன்னை இந்திராகாந்தி கூட இனப்படுகொலை என்று கூறியிருந்தார். இன்றைக்கு தமிழ் தரப்புகள் எல்லோருமே இது இனப்படுகொலை என்று வற்புறுத்தி கொண்டு இருக்கிறோம். கனடா நாட்டினுடைய பிரதமர் இப்போது இனப்படுகொலை என்று கூறி இருக்கின்றமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

நாங்கள் ஒரு தேசிய இனம். நாங்கள் இலங்கைத்தீவிலே யாழ்ப்பாண இராச்சியம் என்று இறைமையோடு தனி நாடாக வாழ்ந்த இனம். 400 ஆண்டுகளுக்கு முன்னர் எங்களுடைய இறைமை பறிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அன்று இழந்த இறைமையை கோருகின்ற நிலைமையில் நாங்கள் இவ்வாறான இனப்படுகொலையின் பின்னர் நாங்கள் ஒரு ஈடு செய் நீதியை பரிகார நீதியை கோரிக் கொண்டு இருக்கின்றோம். இங்கு நடைபெற்ற இனப்படுகொலைக்காக சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்திலே இந்த குற்றவாளிகளை நிறுத்த வேண்டிய ஒரு போராட்டத்தை நடத்த வேண்டிய தேவையிலே நாங்கள் இருந்து கொண்டிருக்கின்றோம். இதைவிட மீண்டும் இந்த தீவிலே ஒரு இனப்படுகொலை போன்ற விடயங்கள் நிகழாமல் இருப்பதற்காக இந்த விடயங்களை நாங்கள் தொடர்ந்தும் வலியுறுத்த வேண்டும்.





இப்பொழுது மீள நிகழாமை இருக்க வேண்டுமென்றால் அதற்கு என்ன செய்ய வேண்டுமென்று தீவிரமாக சிந்திக்க வேண்டும். தனி நாடாக சுதந்திர தேசமாக இருந்தால் தான் தமிழ் மக்களின் இறைமையை பாதுகாக்க முடியும். இனப்படுகொலை நடைபெற்றதன் பின்னர் நாங்கள் சமஸ்டி என்றோ கூட்டு சமஸ்டி என்றோ அவர்களிடம் போய் மீண்டும் சொல்லிக் கொண்டு இருக்க முடியாது. அவ்வாறான நிலைமையிலே சிங்கள பௌத்த பேரினவாதிகளினுடைய மனநிலை இல்லை. அதை நாங்கள் தெரிந்து கொண்டு நாங்கள் சர்வதேச சமூகத்தை நோக்கி அமெரிக்காவிலும் கனடாவிலும் மற்ற நாடுகளில் இருக்கக் கூடிய அந்தந்த நாடு அரசாங்கங்களை ஒரு சுதந்திரத்திற்கான பொதுசன வாக்கெடுப்பை நோக்கிய தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்த வேண்டும். அது பலன் சேர்க்கும்.

வடக்கு மாகாண சபையிலே 2018 ஆம் ஆண்டு புரட்டாதி 11 ஆம் திகதி அவ்வாறு ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது. இனப்படுகொலை தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே தான் இந்த விடயங்களை நாங்கள் கொண்டு செல்ல வேண்டும். மாகாண சபைகளா அல்லது சுதந்திர தமிழீழமா அல்லது ஒற்றை ஆட்சியா என்ற கேள்விக்கு பதில் சொல்லக்கூடிய விதத்திலே ஒரு பொது வாக்கெடுப்பை நடத்துமாறு இன்றைக்கு சர்வதேச சமூகத்தை நோக்கி கோரிக்கைகளை எழுப்ப வேண்டும்.

அண்மையில் கூட இந்திய பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்களுக்கு நான் ஒரு வேண்டுகோளை விடுத்திருந்தேன். இந்தியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜப்பான் அடங்கிய குவாட் நாடுகள் இந்த பொதுசன வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்திருந்தேன். ஐக்கிய நாடுகள் சபையினுடைய பங்களிப்புடன் கண்காணிப்புடன் இந்த வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். இலங்கையில் வாழும் தமிழர்கள் புலம்பெயர் தமிழர்கள் அதிலே பங்குபற்ற வேண்டும்.

பொது வாக்கெடுப்பு தொடர்பான கோரிக்கைகள் 1990 களுக்கு பின்னர் உலகம் முழுவதும் எழுந்துள்ளன. அது கிழக்கு தீமோராக இருக்கட்டும். தென் சூடானாக இருக்கட்டும். கொசோவோவாக இருக்கட்டும் பல இடங்களிலே இந்த விடயங்கள் நடைபெற்று கொண்டிருக்கின்றன. ஏன் பிரித்தானியாவிலே கூட ஸ்கொட்லாந்திலே நடைபெற்றது. அந்த வாக்கெடுப்பு பிரித்தானியா முழுவதிலும் நடைபெறவில்லை. இதை எங்களுடைய மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த கறுப்பு யூலை என்பதை இனப்படுகொலை யூலை என்று சொல்லி, கொல்லப்பட்ட அத்தனை மக்களுக்குமான நீதி கிடைப்பதற்கு பொது வாக்கெடுப்பை நாங்கள் வலியுறுத்த வேண்டும். அதுவே தேச விடுதலை போராட்டத்திலே தங்களுடைய உயிர்களை ஈந்த வீர மறவர்களுக்கும், ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களுக்கும் நாங்கள் செலுத்தக் கூடிய உண்மையான அஞ்சலியாகும். இனியொரு கறுப்பு யூலை இடம் பெறாமல் இருக்க வேண்டுமானால் நாற்பதாண்டுகளுக்கு முன் நடைபெற்ற இனச் சுத்திகரிப்புக்கு நீதி வேண்டும்.



# சிறீமா – சாஸ்திரி ஒப்பந்தமும் ஒரு இனவழிப்பு தான்

சி.அ.யோதிலிங்கம்

ஒரு இனத்தின் இருப்பை அரசியல் பலத்தை அழிப்பதுவும் இனவழிப்பு தான். மலையக மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் ஆகின்றன. 1823 ஆம் ஆண்டு முதன் முதல் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டவர்கள் தற்போது 2023 ஆம் ஆண்டு வரை 200 ஆண்டுகள் இந்த நாட்டில் வாழ்ந்து இருக்கிறார்கள். இந்த 200 வருடம் என்பது உண்மையில் ஒரு சமூகத்தை பொறுத்தவரையில் மிகப்பெரிய காலம் ஆகும். ஆனால் இந்தக் காலப்பகுதியில் நடந்திருக்க வேண்டிய மாற்றங்கள் அவர்கள் மத்தியில் நடந்திருக்கிறதா என்று சொன்னால் இல்லை என்று தான் நாங்கள் கூற வேண்டும்.

இதே காலப்பகுதியில் உலகினுடைய பல நாடுகளுக்கு தமிழ்நாட்டில் இருந்து தமிழ் மக்கள் இடம்பெயர்ந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அந்தந்த நாடுகளில் பல்வேறு உரிமைகளோடும் வசதிகளோடும் வாழ்கின்ற நிலைமை காணப்படுகின்றது. இலங்கையில் மட்டும் மலையக மக்கள் 200 வருடங்கள் இருக்கின்ற போதும் இன்றைக்கும் கூட தங்களுக்கு சொந்தமாக நிலம் இல்லாமல் இருக்கின்ற நிலைமை தான் காணப்படுகின்றது. சொற்ப மாற்றங்கள் நடந்திருக்கிறது என்பது உண்மை தான். கல்வி கற்ற சமூகம் ஒன்று மலையகத்திலே எழுச்சி அடைந்திருக்கிறது. அது ஒரு முக்கியமான மாற்றம். அதிலும் சிறீபாத கல்வியியல் கல்லூரி வந்த பின்னர் மலையக ஆசிரியர்கள் ஒரு தனி சமூகமாக எழுச்சி அடைந்திருக்கிறார்கள். அவை எல்லாம் வரவேற்கப்பட வேண்டிய மாற்றங்கள். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இன்றைக்கு 400க்கும் மேற்பட்ட மலையக மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இதுவும் ஒரு வகை வளர்ச்சி தான். கல்வியியல் கல்லூரி, ஆசிரியர் கலாசாலை என்பனவும் மலையகத்தில் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதுவும் சமூகத்தினுடைய வளர்ச்சிக்கு உதவிகளை புரிந்திருக்கிறது என்று நாங்கள் கூறலாம்.

நீண்ட காலமாக தொழிற்சங்க அரசியலினுடைய ஆதிக்கத்திற்குள் மலையகத்தினுடைய அரசியல் இருந்தது. அந்த நிலைமை மாறி இன்றைக்கு ஒரு இன அரசியலை நோக்கி மலையகம் வளர்ச்சியடைந்திருக்கிறது என்பதும் வளர்ச்சி தான். பிரதிநிதித்துவ அரசியலை பொறுத்தவரையிலும் கூட இன்றைக்கு பாராளுமன்றம், மாகாணசபை, என மலையக மக்கள் பிரதிநிதிகளை கொண்டிருக்கின்றார்கள். அதுவும் ஒரு வளர்ச்சி என்று தான் நாங்கள் கூறலாம். அவர்கள் ஒரு அரசியல் சமூகமாகவும் வளர்ந்து வருகிறார்கள். அது உண்மையில் சந்தோசப்பட வேண்டிய ஒன்று தான். ஆனாலும் இலங்கையில் வாழ்கின்ற ஏனைய மக்களுடன் ஒப்பிடுகின்ற போது மலையக மக்களின் வளர்ச்சி என்பது போதுமானதாக இல்லை. இன்றைக்கும் கூட அரச நிர்வாகத்திற்கு கீழ் மலையக மக்கள் இன்னமும் உள்ளடக்கப்படவில்லை. அவர்கள் தோட்ட நிர்வாகத்திற்கு கீழ் ஒரு அரைகுறை அடிமை நிலையில் வாழ்கின்ற நிலைமை தான் காணப்படுகின்றது. 200 வருடங்களாகியும் காணி அற்ற, வீடு அற்ற சமூகமாக மலையக மக்கள் இருப்பதை நாங்கள் பார்க்கலாம். தமிழ்நாட்டில் இருந்து இதே காலப்பகுதியில் இடம்பெயர்ந்து மலேசியா, தென்னாபிரிக்கா, மொரிசியஸ் போன்ற நாடுகளில் வாழ்கின்ற தமிழ்மக்கள் இன்றைக்கு அங்கு பல்வேறு உரிமைகளோடு வலுவாக வளர்ச்சி கண்ட சமூகமாக இருக்கிறார்கள். மலேசியாவில்

> ஒரு நூற்றாண்டு காலம் முழுமையான இருட்டுக்குள் மலையக மக்கள் வைத்திருக்கப்பட்டார்கள் அங்கு எவரும் உள்ளுக்குள் போக இயலாது அவர்களுடைய உரிமைக்குரல்களை எழுப்ப இயலாத நிலைமைகள் எல்லாம் இருந்தன

அவர்கள் ஒரு அரசியல் சமூகமாக கூட இருக்கிறார்கள் என்று சொல்லிக் கொள்ளலாம். மலையக இந்திய காங்கிரஸ் முக்கியமான ஒரு அரசியல் கட்சியாக அங்கு இருப்பதை நாங்கள் பார்த்துள்ளோம்.

நாங்கள் 200 வருடத்தை பற்றி பேசுவதன் நோக்கம் உண்மையில் இந்த போதாமைகளை நாங்கள் எப்படி நீக்குவது என்பது தொடர்பாக விழிப்பு நிலை ஒன்றை உருவாக்குவற்கு தான். அது இன்றைக்கு மிகவும் அவசியமான ஒன்று. அந்த விடயத்தை பொறுத்தவரையில் மலையக அரசியல் வளர்ச்சியை முன் நகர்த்த வேண்டிய பணிகளை பற்றி விரிவாக ஆராய வேண்டிய தேவை எங்களுக்கு இருக்கிறது.

மலையக மக்களின் வரலாறு என்பது பல்வேறு கால கட்டங்களுக்கு ஊடாக வளர்ந்து வந்திருக்கிறது. விளக்கத்திற்காக அந்தக் கால கட்டங்களை பிரித்து நோக்குவது அதனை புரிந்து கொள்வதற்கு உதவியாக இருக்கும். அதில் முதலாவது கால கட்டம் 1919 தொடக்கம் 1935 வரையிலான கால கட்டம். உண்மையில் 1919 ஆம் ஆண்டுக்கு முன்னர், 1823 இலிருந்து 1919 வரை கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டு காலம் முழுமையான இருட்டுக்குள் அந்த மக்கள் வைத்திருக்கப்பட்டார்கள். அங்கு எவரும் உள்ளுக்குள் போக இயலாது. அவர்களுடைய உரிமைக்குரல்களை எழுப்ப இயலாத நிலைமைகள் எல்லாம் இருந்தன. இந்த நிலைமை மாற்றமடைந்தது 1919ஆம் ஆண்டு என்று தான் சொல்லலாம்.

1919 ஆம் ஆண்டு சேர்.பொன் அருணாச்சலமும், திருவாளர் பெரி சுந்தரமும் (பெரியண்ணன் சுந்தரம்) இணைந்து மலையக மக்களுக்கான ஒரு அமைப்பை உருவாக்கினார்கள். அது தொழிலாளர் நலன்புரி சங்கம் என்று அழைக்கப்பட்டது. இதுதான் இலங்கையில் உருவாக்கப்பட்ட முதல் தொழிற் சங்கம் என்பது குறிப்பிடத்தக்கது. அது உருவாக்கப்பட்ட பிறகு தான் மலையக மக்கள் மத்தியில் ஒரு நிறுவனமயமாக்கல் தொடங்கியது. அன்றைக்கு துண்டு முறை என்று ஒரு முறை இருந்தது. அதாவது ஒரு தோட்டத்தில் இருந்து இன்னொரு தோட்டத்திற்கு போக வேண்டுமென்றால் அவர்கள் ஒரு துண்டு எழுதி அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும். இவர்கள் இந்த தோட்டத்தில் எவ்வித பிரச்சனையோ கடனோ இல்லாதவர்கள் என்று துண்டு இருந்தாற் தான் மற்ற தோட்டத்திலே அனுமதிப்பார்கள். உதாரணமாக திருமணம் செய்து போனால் கூட பிற தோட்டங்களில் அனுமதிப்பதற்கு அந்த துண்டு தேவைப்பட்ட நிலைமை தான் இருந்தது. இது ஒரு அடிமை சீட்டு முறை. இந்த முறைமையை இல்லாமல் ஒழிப்பதற்காக அருணாச்சலமும், பெரி சுந்தரமும் போராடினார்கள். ஆனாலும் மலையக மக்கள் மத்தியில் ஒரு வலுவான நிறுவனமாக செயற்பட்டது நடேச ஐயர் தான். நடேச ஐயர் தான் தோட்டங்களுக்கு எல்லாம் சென்று அங்கே தொழிற்சங்கங்களை உருவாக்கி அவர்களுடைய உரிமைக்காக கடுமையாக குரலை கொடுத்தவராக இருந்தார். இது முதலாவது காலகட்டம்.

1935-1947 வரை உள்ள காலத்தை இரண்டாவது காலகட்டம் என்று சொல்லலாம். இந்த காலகட்டம் தான் இடதுசாரி கட்சிகள் எழுச்சி அடைந்த காலகட்டம். லங்கா சமசமாஜ கட்சியின் தோட்ட தொழிலாளர் சங்க சம்மேளனம் என்கிற ஒரு தொழிற்சங்கம் மிக முக்கியமான தொழிற்சங்கமாக மக்கள் மத்தியில் செயற்பட்டது. வேலை நிறுத்தப் போராட்டங்களை நடாத்துதல் என்கின்ற அந்த வளர்ச்சியும் கூட இடதுசாரி கட்சியினுடைய காலத்தில் தான் ஆரம்பமானது என்று சொல்லலாம். புகழ்பெற்ற முல்லோயா போராட்டம் எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. கண்டி மாவட்டத்தில் ஹேவாவட்ட பிரதேசத்தில் இருந்தது தான் முல்லோயா தோட்டம். அந்த தோட்டத்தில் ஆசிரியராக இருந்த ஒருவர் இடதுசாரி தொழிற்சங்க பணியிலும் ஈடுபட்டார் என்பதற்காக அவரை இடமாற்றம் செய்தார்

கள். அந்த இடமாற்றத்தை எதிர்த்தும் முல்லோயா தோட்ட மக்கள் போராடினார்கள். போராடும் போது அவர்கள் சம்பள உயர்வு கோரிக்கையையும் முன்வைத்து போராடினார் கள். இந்த போராட்டத்தின் போது பொலிசார் சுட்டதில் கோவிந்தன் என்கின்ற ஒரு தொழி லாளி மரணமடைந்தார். அவர் தான் மலையகத் தில் கொல்லப்பட்ட முதன் முதல் போராளி என்று சொல்லிக் கொள்ளலாம். இன்றைக்கு கூட கோவிந்தனுடைய நினைவு தினத்தை மையமாக வைத்து தான் மலையக தியாகிகள் தினம் அனுஸ்டிக்கப்படுவதை நாங்கள் பார்க் கின்றோம்.

ஆகவே இந்த இடதுசாரி கட்சிகள் வலு வான ஒரு தொழிற்சங்க இயக்கத்தை வலுவான ஒரு இடதுசாரி இயக்கத்தை மலையகத்திலும் வளர்வதற்கான வாய்ப்புக்களை உருவாக்கி கொடுத்தார்கள். இதற்கு பிறகு 1939 ஆம் ஆண்டு இலங்கை இந்திய காங்கிரஸ் உருவாகிறது. இலங்கை இந்திய காங்கிரஸ் உருவானதன் பின்னர் இது மலையக மக்கள் மத்தியில் செல் வாக்கு பொருந்திய அமைப்பாக காணப்படு கின்றது. அதுவும் பல வேலைநிறுத்தப் போராட் டங்கள் எல்லாவற்றையும் நடத்தி இருந்தது. 1947ஆம் ஆண்டு தேர்தல் நடைபெற்ற போது அந்த தேர்தலில் மலையகத்தில் இருந்து 7 பிரதிநிதிகள், அதாவது இலங்கை இந்திய காங்கிரஸில் இருந்து 6 பிரதிநிதிகளும் ஒருவர் சுயேட்சையாகவும் தெரிவு செய்யப்பட்டனர். அதேவேளை 20 க்கும் மேற்பட்ட இடதுசாரி உறு ப்பினர்கள் தெரிவு செய்யப்படுவதற்கு மலையக மக்களினுடைய வாக்குகள் காரணமாக இருந் தன. இது கண்டிய சிங்களவர்களினுடைய ஆதிக்கத்திற்கு மலையகத்தில் இடைஞ்சலாக இருக்கும் என்பதற்காக தான் 1948 ஆம் ஆண்டு இலங்கை பிராஜாவுரிமை சட்டம் கொண்டு வரப்பட்டது. தொடர்ந்து 1949 ஆம் ஆண்டில் இந்திய பாகிஸ்தானிய பிரஜாவுரிமை சட்டமும் அதே ஆண்டு தேர்தல்கள் திருத்தச்சட்டமும் கொண்டு வரப்பட்டு மலையக மக்களினுடைய வாக்குரிமை இல்லாமல் செய்யப்பட்டது. கிட் டத்தட்ட 30 ஆண்டுகள் மலையக மக்கள் ஒரு பிரதிநிதித்துவ அரசியலின் பலன் களை அனுபவிக்க முடியாத மோசமான ஒரு இருட்டுக்குள் வைக்கப்பட்டிருந்தார்கள். பிரஜாவுரிமை சட்டம் தொடர்பாக பலருக்கு தெளிவுகள் போதாமல் இருக்கிறது. இரண்டு பிர ஜாவுரிமை சட்டங்கள் ஆரம்பத்தில் கொண்டு வரப்பட்டன. முதலாவது, 1948 ஆம் ஆண்டு பிரஜாவுரிமை சட்டம். அந்த பிரஜாவுரிமை சட் டத்தின்படி பிராஜாவுரிமைக்கு விண்ணப்பிப்ப வர் இலங்கையில் பிறந்தவராக இருக்க வேண் டும். அவருடைய தந்தையும் இலங்கையில் பிறந்தவராக இருக்க வேண்டும். அதை நிரூபிப் பது என்பது மிகவும் கடினமான விடயமாக இருந்தது. ஏனென்றால் பிறப்பு பதிவு இலங் கையில் நடைமுறைக்கு வந்ததே 1911 ஆம் ஆண்டு தான். அதுவும் மலையக மக்கள் தொடர்பான பதிவுகள் பெரும்பாலும் இருக்க வில்லை. அவற்றை எல்லாம் தேடியும் எடுக்க முடியாது. தோட்ட நிர்வாகம் நினைத்தால் பதிவார்கள், இல்லை என்றால் பதியாமல் விட்டு விடுவார்கள் என்ற நிலைமை தான் உண்மையில் இருந்தது.

இதற்குப் பிறகு இந்த பிரஜாவுரிமை சட் டத்திற்கு பலமான எதிர்ப்பு வந்ததால் 1949 ஆம் ஆண்டு இந்திய பாகிஸ்தானிய பிரஜாவுரிமை சட்டம் என்று இன்னுமொரு சட்டம் கொண்டு வரப்பட்டது. இந்த சட்டத்தின்படி திருமணம் செய்தவராயின் 7 வருடங்கள் இலங்கையில் தொடர்ச்சியாக வாழ்ந்து வருவதை நிரூபிக்க வேண்டும். திருமணம் செய்யாதவராயின் 10 வருடங்கள் இலங்கையில் தொடர்ச்சியாக வாழ்ந்து வருவதை நிரூபிக்க வேண்டும். நிரூபிப் பவர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கப்படும் என்று கூறப்பட்டது. ஆனால் இங்கேயும் நிரூபிப்பு என்பது தான் பிரச்சனையாக இருந்தது. ஏனெ ன்றால் பிறப்புச்சான்று பத்திரங்கள் எல்லாம் ஒழுங்காக இல்லாத நிலைமை இருந்தது. அவர் தொடர்ச்சியாக இங்கு இருந்தவர் என் பதை நிரூபிப்பது கடினமாக இருந்தது. அது வும் மலையக மக்கள் இந்தியாவுக்கு போய் வருகின்ற நிலைமை எல்லாம் இருந்தது. அவ் வாறு போய் வருகின்ற நிலைமை இருந்தால் அந்த நபர்களை கணக்கில் எடுக்க மாட்டார்கள். மேலும், இதனை பரிசீலனை செய்த அதிகாரிகள் எவ்வளவுக்கு பிரஜாவுரிமையை இல்லாமல் செய்யலாம், எவ்வாறு விண்ணப்பத்தை நிராக ரிக்கலாம் என்பதில் தான் கூடிய கவனம் செலுத்தினார்கள். இதுவும் மலையக மக்களை

படுமோசமாக பாதித்தது. ஆக மொத்தமாக எல்லா மலையக மக்களுமே பிரஜாவுரிமை அற்றவர்கள் ஆக்கப்பட்டார்கள்.

1967 ஆம் ஆண்டு சிறீமா சாஸ்திரி ஒப்பந்தம் வந்ததன் பிறகு அதை அமுலாக்கு வதற்கான அமுலாக்க சட்டம் கொண்டு வரப் பட்டது. அதனூடாக பதிவு பிரஜை என்று தனி யாக பதிவு செய்கின்ற நிலைமையும் வந் தது. இந்த சட்டத்தை தமிழரசு கட்சி ஆதரித் தது என்பதற்காக தான் ஊர்காவற்துறை பாரா ளுமன்ற உறுப்பினர் நவரட்ணம் தமிழரசு கட்சி யில் இருந்து வெளியேறி தமிழர் சுயாட்சி கழகம் என்பதை உருவாக்கினார். பிரஜாவுரிமை சட்டங் கள் உண்மையில் படுமோசமான சட்டங்கள், அவற்றை இலங்கையில் வாழ்ந்த அனைவரும் கடுமையாக எதிர்த்து இருக்க வேண்டும். தமி ழர் தரப்பில் தமிழரசு கட்சி வந்ததன் பிறகு எதிர்ப்பு இருந்ததே தவிர, அதற்கு முன்னர் துரதிஷ்டவசமாக வலுவான எதிர்ப்பு என்பது இருக்கவில்லை. பிரஜாவுரிமை சட்டத்திற்கு தமிழ் அரசியல்வாதிகளும் ஒரு காரணமாக இருந்தார்கள் என்று குற்றம் சுமத்துகின்ற நிலைமையும் இருக்கிறது.

மலையக மக்கள் தொடர்பாக இந்தியா செய்த மிகவும் மோசமான செயற்பாடு தான் சிறீமா-சாஸ்திரி ஒப்பந்தம். 1964 ஆம் ஆண்டு இலங்கை பாகிஸ்தானுடன் கூடுதலாக நெருக் கமாக செல்லப் பார்க்கிறது என்பதை தடுக்க வேண்டும் என்பதற்காக இந்த சிறீமா-சாஸ்திரி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. சிறீமா-சாஸ்திரி ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னர், கிட்டத் தட்ட சுதந்திரம் அடைந்த காலத்தை அண் மித்த காலங்களில் இலங்கையில் இரண்டாவது பெரிய தரப்பாக இருந்தது மலையக மக்கள் தான். இந்த சிறீமா-சாஸ்திரி ஒப்பந்தத்தோடு அவர்கள் நான்காவது இடத்திற்கு போக வேண்டிய நிலைமை வந்தது. அந்த சிறீமா-சாஸ்திரி ஒப்பந்தம் எழுதப்பட்ட பொழுது பிர ஜாவுரிமை இன்றி 9,75,000 மலையக மக்கள் இலங்கையில் வசிக்கிறார்கள் என்று சொல்லப் பட்டது. அதில் 1,75,000 பேரை தவிர்த்து மிகுதி 8,00,000 பேரில் 3,00,000 பேரை இலங்கை பொறுப்பெடுப்பதாகவும் 5,00,000 பேரை இந்தியா பொறுப்பெடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அதன் பிறகு 1974 ஆம் ஆண்டு சிறீமா-இந்திரா ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதில் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தில் விடுபட்டுப் போன 1,50,000 பேரில் இந்தியா 75,000 பேரை பொறுப் பெடுப்பதாகவும் மிகுதி 75,000 பேரை இலங்கை பொறுப்பெடுப்பதாகவும் ஒப்பந்தம் இடப்பட்டது. ஆக மொத்தத்தில் 5,75,000 பேரை இந்தியா பொறுப்பெடுப்பது எனவும் 3,75,000 பேரை இல ங்கை பொறுப்பெடுப்பதாகவும் முடிவானது. இந்த ஒப்பந்தத்தின் படி ஒரு பகுதி மலையக மக்கள் இந்தியாவுக்கு விண்ணப்பித்தார்கள். இன்னொரு பகுதியினர் இலங்கைக்கு விண்ணப் பித்தார்கள். ஒரு நாட்டிற்குமே விண்ணப்பிக்கா மல் இருந்தவர்களும் இருந்தார்கள். அவ்வாறு இருந்த 95,000 பேரும் அவர்களது வம்சா வளியினரும் நாடற்றவர்கள் ஆனார்கள். பின் னர் ஜனாதிபதி பிரேமதாச காலத்தில் ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டு அனைவருக்கும் பிரஜாவுரிமை வழங்கப்பட்டது.

இதில் உள்ள முக்கியமான விடயம் என்னவென்றால் இந்தியா அந்த மக்களை திரு ப்பி எடுப்பது என்றால் முழுப்பேரையும் எடுத் திருக்க வேண்டும். இல்லை என்றால் முழுப் பேரையும் எடுக்காமல் விட்டிருக்க வேண்டும். அரைவாசிப்பேரை எடுத்து அரைவாசிப்பேரை விட்டதால் மலையக மக்கள் அரசியல் ரீதி யாக பலவீனம் ஆகி விட்டார்கள். இதை வெளிநாட்டு அமைச்சர் ஜெய்சங்கர் வந்த போது மனோ கணேசன் நேரடியாகவே சொன் னார். ஆனால் ஜெய்சங்கர் அதற்கு பதிலளிக் காமல் கேட்டுக் கொண்டு போனார் என்று சொல்லப்படுகிறது. அதேபோல தான் பிரித்தா னிய தூதுவரோடும் கதைத்ததாக மனோ கணேசன் சொன்னார். "நீங்கள் தான் இங்கே கொண்டு வந்து மலையக மக்களை குடியேற்றி னீர்கள். நீங்கள் குடியேற்றிய ஏனைய இடங் களில் எல்லாம் நீங்கள் தலையிட்டு தமிழ் மக் களுக்கு உரிமைகளை வாங்கி கொடுத்திருக் கிறீர்கள். ஆனால் இங்கு மட்டும் நீங்கள் பாராமுகமாக இருந்திருக்கிறீர்கள். இது எந்த ளவு தூரம் சரியானது?" என்று பிரித்தானிய தூதுவரிடம் மனோ கணேசன் கேட்ட போது அவரும் மௌனமாக இருந்தார் என்று சொல் லப்படுகிறது.

(15 ஆம் பக்கம் பார்க்கவும்)




# உள்நாட்டு கடன் மறுசீரமைப்பால் பறிக்கப்படும் உடைமைகள்

ஒரு நாட்டின் கடன் மறுசீரமைப்பில் நடைமுறைப்படுத்தப்படும் படிமுறைகள் தொடர்பாக நிமிர்வு ஆனி, ஆடி மற்றும் ஆவணி, 2022 இதழ்களில் விரிவாக விளக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு பிணை முறிக்கடன் மறுசீரமைப்புக்கும் அடிப்படையில் இருப்பது எவ்வாறு அந்த கடன் சுமை கடன் வாங்கியவர்கள் மற்றும் கடன் வழங்குனர்கள் இடையே பகிரப்பட வேண்டும் என்ற முடிவுகளை எடுப்பது தான். கடன் வாங்கிய நாட்டின் நிதி நிலைமையை சரிசெய்வதற்காக அதன் குடிமக்கள் மீது எவ்வளவு சுமைகள் சுமத்தப்படலாம், அதேவேளை கடன் வழங்கியவர்கள் எவ்வளவு கடன் நிவாரணத்தை அந்த நாட்டுக்கு வழங்க வேண்டும் என்ற முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இந்த முடிவுகளை எடுப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனம் வேண்டும். அந்த நிறுவனமாக சர்வதேச நாணய நிதியம் (IMF) இருக்கின்றது. அது இரு தரப்பினரும் பேசுவதற்கான ஒரு ஊடகத்தை அமைத்து தருகிறது.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் நோக்கம் எவ்வளவு கடனை கடன் வழங்குனர்கள் தள்ளுபடி செய்ய வேண்டும், எவ்வளவு தூரம் வட்டி வீதத்தை குறைக்க வேண்டும், எவ்வளவு தூரம் கடனை திருப்பி செலுத்தும் காலத்தை நீடிக்க வேண்டும் போன்ற விடயங்களில் இணக்கப்பாட்டை எட்டுவது தான். அதேவேளை இந்த விடயங்களை எந்த கடன் வழங்குனர்கள் செய்ய வேண்டும் எவர் செய்யத் தேவையில்லை என்ற முடிவுகளும் எடுக்கப்பட வேண்டும். அதற்கு கைமாறாக கடன் வாங்கிய நாட்டு மக்கள் மீது எவ்வளவு சுமை ஏற்றப்பட வேண்டும் போன்ற முடிவுகளும் எடுக்கப்பட வேண்டும். இதில் முடிவெடுக்கும் சுதந்திரம் கடன் வாங்கிய நாட்டுக்கு இருப்பது போன்ற ஒரு தோற்றப்பாட்டை உருவாக்கினாலும் உண்மையில் முடிவெடுப்பது கடன் வழங்கிய பன்னாட்டு நிதி நிறுவனங்களே.

அந்தவகையில், ஓர் அரசாங்கம் உள்நாட்டு நிதி நிறுவனங்களிடம் வாங்கிய கடன்களும் மறுசீரமைக்கப்பட வேண்டும் என்று வெளிநாட்டு கடன் வழங்குனர்கள் வற்புறுத்துவார்கள். அரசாங்கத்துக்கு கடனை வழங்கிய உள்நாட்டு வங்கிகளும் அந்தக் கடனில் ஒரு பகுதியை தள்ளுபடி செய்ய வேண்டும் அல்லது வட்டி வீதத்தை குறைக்க வேண்டும்

அல்லது கடனை திருப்பி செலுத்தும் காலத்தை நீட்டிக்க வேண்டும் என்று வெளிநாட்டு கடன் வழங்குனர்கள் வற்புறுத்துவார்கள். ஏற்கனவே பொருளாதார நெருக்கடிகளுக்கு உள்ளாகி இருக்கும் உள்நாட்டு வங்கிகளை இதனைச் செய்யுமாறு கேட்டால் அவை திவாலாகிப் போய் விடும் என்று அரசாங்கம் வாதிடும். உள்நாட்டு வங்கிகளால் அப்படிச் செய்ய முடியாவிட்டால் அரசுக்கு கடன் வழங்கிய ஏனைய உள்நாட்டு நிதியங்கள் அந்த செயலைச் செய்யுமாறு வற்புறுத்தப்படும். இந்த முடிவுகளெல்லாம் IMF இனாலும் கடன் வழங்கிய நாடுகளாலும், பன்னாட்டு நிதி நிறுவனங்களாலும் ஏற்கனவே எடுக்கப்பட்டிருக்கும். கடன் வாங்கிய அரசாங்கம் அவற்றை நடைமுறைப்படுத்தியே ஆக வேண்டிய கட்டாயத்தில் இருக்கும்.

இந்தப் பின்னணியில் தான் சிறிலங்காவின் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளையும் பார்க்க வேண்டும். உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு திட்டம் ஒன்றை இலங்கை சனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் கடந்த ஆனி மாதம் 28 ஆம் திகதி வெளியிட்டது. அது ஆடி மாதம் முதலாம் திகதி பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது. இந்த திட்ட வெளியீட்டால் மக்கள் பதட்டப்பட்டு வங்கிகளில் இருக்கும் தமது பணத்தை எடுத்து விடுவார்களோ, அதன் மூலம் வங்கிகள் திவாலாகி விடுமோ என்ற பயத்தில் ஆனி 29 முதல் ஆடி 3 வரை வங்கிகளுக்கு விடுமுறை என்று அறிவிக்கப்பட்டது. வெளியிடப்பட்ட உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தில் வங்கிகளின் கடன் மறுசீரமைக்கப்படாது என்றும் அரசுக்கு கடன் வழங்கிய ஏனைய நிதியங்களின் கடன்களே மறுசீரமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அந்த நிதியங்களில் முக்கியமானவை ஊழியர் சேமலாப நிதியமும் (EPF), ஊழியர் நம்பிக்கை (ETF) நிதியமும் ஆகும். இந்த நிதியங்களில் முதலிட்டு இருப்பவர்கள் பெரும்பாலும் உழைக்கும் வறிய மக்கள் ஆவார்கள். சிறிலங்காவின் பணக்கார வங்கிகளில் கைவைக்காமல் ஏழை மக்களின் ஓய்வூதியத்தில் அரசாங்கம் கைவைத்து இருப்பதாக சமூக செயற்பாட்டாளர்களும் தொழிற்சங்கவாதிகளும் கூறுகின்றனர். இது தொடர்பாக யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி அகிலன் கதிர்காமர் ஆடி 3, 2023 டெய்லி மிரர் (Daily Mirror) பத்திரிகையில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.

**உள்நாட்டு கடன் மறுசீரமைப்பால் பறிக்கப்படும் உடைமைகள்**

கடந்த 28.06.2023 புதன்கிழமை அரசாங்கத்தால் வெளியிடப்பட்டு சனிக்கிழமை பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டம் மிகவும் முக்கியமான உள்நாட்டு நிதி வளம் ஒன்றை மட்டுமே இலக்கு வைத்துள்ளது. மக்களின் ஓய்வூதிய நிதியம் தான் அது. உழைக்கும் மக்களின் எதிர்கால வாழ்வியலை வலுவாக பாதிக்கும் எந்தவொரு திட்டமும் இலகுவாக நிறைவேற்றப்பட முடியாது. அதற்கு எதிர்ப்பு வலுவடையும் போது அது எந்தளவுக்கு அரசியல் ரீதியாக நடைமுறைப்படுத்தப்பட முடியும் என்பதைப் பொறுத்து அரசாங்கத்தின் திட்டம் பாரிய மாற்றங்களுக்கு உட்படும். அரசாங்கம் ஏன் ஓய்வூதிய நிதியத்தை இலக்கு வைத்தது? உழைக்கும் வர்க்கம் இதற்கு கொடுக்கப் போகும் விலை என்ன? இத்திட்டத்துக்கு மாற்று என்ன?

**உள்நாட்டுக் கடன்**

கடந்த ஆண்டு சிறிலங்கா தனது வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் வங்குரோத்து நிலைமையை பிரகடனம் செய்தது. இப்பொழுது பிணைமுறிக் கடன் பத்திரத்தை வைத்திருக்கும் பன்னாட்டு நிதி நிறுவனங்கள், மற்றும் கடன் கொடுத்த சீனா, ஜப்பான் மற்றும் இந்தியா போன்ற நாடுகளுடன் கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளது. தனது உள்நாட்டு நிறுவனங்களில் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்துவதில் சிறிலங்கா அரசாங்கம் தவறவில்லை என்றாலும், மூன்று காரணங்களுக்காக உள்நாட்டுக் கடனை மறுசீரமைக்க அது விரும்புகிறது.

முதலாவதாக, சர்வதேச பிணைமுறிப் பத்திரதாரர்களின் கோரிக்கைகளைத் திருப்திப் படுத்துவதாகும். அதாவது, சிறிலங்கா திருப்பிச் செலுத்த வேண்டிய ஒட்டுமொத்த கடனை குறைப்பதன் ஊடாக தமது கடன் திருப்பிச் செலுத்தப்படுவதில் ஏற்படும் அபாயங்கள் குறைக்கப்பட வேண்டும் என அவர்கள் விரும்புகிறார்கள். அந்த விருப்பத்தை திருப்திப்படுத்த உள்நாட்டுக் கடன்களும் குறைக்கப்பட வேண்டும்.

இரண்டாவதாக, ஒவ்வொரு ஆண்டும் முதல் மற்றும் வட்டிக்காக செலுத்தப்படும் தொகை (Gross Financing Needs, GFN) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) இன் 13% ஆகக் குறைக்கப்பட வேண்டும் என்ற சர்வதேச நாணய நிதியத்தால் நிர்ணயிக்கப்பட்ட இலக்குக்கு சிறிலங்கா அரசு கண்மூடித்தனமாக இணங்கி இருக்கிறது.

மூன்றாவதாக, சர்வதேச பிணைமுறிப் பத்திரதாரர்கள் மற்றும் IMF ஆகிய இருதரப்பினரையும் மகிழ்ச்சியாக வைத்திருக்க அரசாங்கம் விரும்புகிறது. ஏனெனில், அப்படிச் செய்தால்தான், சர்வதேச நாணய நிதியம் வரையறுத்த படி 2027 ஆம் ஆண்டு முதல் மீண்டும் பிணைமுறிப் பத்திரங்களை விற்று சர்வதேச சந்தையில் கடன்களை பெறமுடியும்.

விக்கிரமசிங்க-ராஜபக்ச அரசாங்கம் உள்நாட்டு கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை பாராளுமன்றத்தில் தனது உளுத்துப் போன பெரும்பான்மையூடாக வெளிக்கொண்டு வந்துள்ளது. எவ்வாறாயினும், வெளிநாட்டு கடன்களில் ஓர் அற்பமான 30% தள்ளுபடியை (haircut) செய்வதற்கு கூட பிணைமுறிக் கடன் பத்திரங்களை வைத்திருக்கும் சர்வதேச வல்லூறுகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது மிகவும் கடினமான பணியாக இருக்கும். சர்வதேச மூலதனச் சந்தைகளில் மீண்டும் கடன் வாங்குவதற்கான முயற்சிகள் இன்னும் கடினமாக இருக்கும். தற்போதைய கடன் நெருக்கடியின் மையக் காரணங்களில் இதுவும் ஒன்று. இறுதியாக, வெளிநாட்டுக் கடனும் உள்நாட்டுக் கடனும் முற்றிலும் வேறுபட்டவை. அதாவது, வெளிநாட்டுக் கடனானது வெளிநாட்டு ஏற்றுமதி வருமானத்துக்கும் இறக்குமதிச் செலவுக்கும் உள்ள வித்தியாசமான அந்நியச் செலாவணி நாணயத்தில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். ஆனால் உள்நாட்டுக் கடனோ ரூபாய்களில் செலுத்தப்பட முடியும். மேலும், உள்நாட்டுக் கடனை திருப்பி செலுத்துவதற்கு பல வழிகள் இருக்கின்றன. உதாரணமாக, உள்நாட்டு குறுங்கால கடன் நீண்டகால கடனாக மாற்றப்படலாம்.

> இதனால் பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் மிகவும் பாதிக்கப்படப் போகிறவர்கள் ஓய்வு பெற்றவர்கள் இவர்களின் முழு எதிர்காலமும் அவர்களுடைய ஓய்வூதியச் சேமிப்பில் தங்கியிருக்கிறது

உள்நாட்டுக் கடனை திருப்பிச் செலுத்தாமல் இருப்பது அல்லது அதனை மறுசீரமைப்பது மிகவும் ஆபத்தானது. ஏனெனில், அது உள்நாட்டு நிதிக் கட்டுமானத்தை அழிவுக்கு கூட இட்டுச் செல்லலாம். இதனாற் தான் ஓய்வூதிய நிதியத்தில் கைவைக்க அரசு முடிவு செய்துள்ளது. அபாக்கியவசமாக, இதனால் பாதிக்கப்படப் போகிறவர்கள் ஓய்வு பெற்றவர்கள். இவர்களின் முழு எதிர்காலமும் அவர்களுடைய ஓய்வூதியச் சேமிப்பில் தங்கியிருக்கிறது. அதனால் பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் மிகவும் பாதிக்கப்படக் கூடியவர்கள். அவர்களுக்கு புதிய வருமானத்தைப் பெறுவதற்கும் வேறு வழி இல்லை.

**ஓய்வூதிய நிதியம்**

மத்திய வங்கியும் திறைசேரியும் நீண்டகால சேமிப்பு நிதிகள் என்று கருதுபவற்றுள் ஊழியர் வைப்பு நிதி (EPF), ஊழியர் நம்பிக்கை நிதி (ETF) மற்றும் சிறிய பொது மற்றும் தனியார் நிதிகள் என்பவை அடங்கும். அவை எல்லாம் சேர்ந்து நாட்டின் நிதித்துறை சொத்துக்களில் 14% ஐ கொண்டிருக்கின்றன. மேலும், இந்த ஓய்வூதிய நிதிகளில் சுமார் 90% ஆனது திறைசேரியின் பிணை முறிப் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

EPF ஐப் பொறுத்தவரை, அதன் கடந்த ஆண்டு நிதியில் 97% ஆனது திறைசேரி பிணைமுறிப் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்டது.

இந்நிலையில், கடந்த ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, பணவீக்கத்துடன் வாழ்க்கைச் செலவில் ஏற்பட்ட உயர்வு மற்றும் ரூபாயின் மதிப்புக் குறைவால் ஓய்வூதிய நிதிகளின் உண்மையான மதிப்பு 40% க்கும் மேல் சரிந்தது. உதாரணமாக, யாராவது இந்த ஆண்டு ஓய்வுபெற்று, அவர்களது EPF பணத்தை மொத்தமாக எடுத்து ஒரு வீடு கட்ட நினைத்தால், அவர்களால் திட்டமிட்ட வீட்டில் பாதி வீட்டைத்தான் கட்ட முடிந்திருக்கும்.

இதற்கிடையில், திறைசேரி பிணைமுறிப் பத்திரங்களுக்கு வழங்கப்பட்ட வட்டி விகிதங்களும் கடந்த ஆண்டு 31% ஆக உயர்ந்தது. அது இப்பொழுது சராசரியாக 22% ஆக உள்ளது. ஆனால் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டால், அது 2025 வரை 12% ஆகவும் அதன் பிறகு 9% ஆகவும் குறைக்கப்படும். அதன்படி, பொருளாதார நெருக்கடியின் போது ஏற்பட்ட இழப்பை EPF போன்ற ஓய்வூதிய நிதிகள் திரும்பப் பெறுவது கடினம். அடுத்து, கடந்த சில ஆண்டுகளில் சராசரியாக வரிக்குப் பிந்தைய வட்டி 9% முதல் 10% வரை உள்ளது. அரசாங்கத்தின் மறுசீரமைப்புத் திட்டத்துடன், ஓய்வூதிய நிதிகளின் திறைசேரி பிணைமுறிப் பத்திரங்களுக்கு வழங்கப்படும் வட்டி விகிதம் 9% ஆகக் குறைக்கப்படும். மேலும் நிதிகளின் செயல்பாட்டுச் செலவுகள் மற்றும் வரிகள் வருமானத்தை இன்னும் குறைவாகக் கொண்டுவரும். அந்தவகையில், ஓய்வூதிய நிதிகள் உண்மையான வளர்ச்சி மிகவும் சிறிதாக இருக்கும். பணவீக்கத்தின் அளவைப் பொறுத்து, ஊழியர்களின் ஓய்வூதிய நிதிகள் உண்மையில் அவர்கள் வைப்பில் இட்டதை விட குறைந்து போவதற்கு கூட சாத்தியம் இருக்கிறது.

அடுத்த 10 ஆண்டுகளுக்கு திறைசேரியின் பிணைமுறிப் பத்திரங்களுக்கு வழங்கப்படும் வட்டி வீதத்தை குறைப்பதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.5% சேமிப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது. இதன்மூலம், IMF பரிந்துரைத்த படி, கடன்களை திருப்பிச் செலுத்த அரசாங்கத்துக்கு தேவைப்படக்கூடிய மொத்த நிதியை (GFN) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 13% ஆகக் குறைக்க முடியும் என நம்புகிறது. வழங்கப்படும் வட்டி வீதத்தை GDP இன் 0.5% ஆல் குறைப்பதன் கூட்டுத் தாக்கத்தை நாம் மதிப்பிட்டால், பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, ஓய்வூதிய நிதிகளின் மதிப்பில் 30% இழப்பு ஏற்படும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், கடந்த ஐந்து ஆண்டுகளில் அனைத்து ஓய்வூதிய நிதிகளின் சராசரி மதிப்பு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 17.7% ஆக உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் அதன் மதிப்பு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.5% ஆல் குறைக்கப்பட்டால், ஒரு தசாப்தத்தில் ஓய்வூதிய நிதிகளின் மொத்த மதிப்பு 12.5% ஆக குறையும்.

> **ஓய்வூதியத்தை சேமிப்பதற்காக நாளாந்த தேவைகளை தியாகம் செய்யும் தோட்டத் தொழிலாளர்கள் ஆடைத் தொழிலாளர்கள் போன்ற மிகவும் ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களுக்கு இது பேரழிவை ஏற்படுத்தும்**

இந்தச் சூழலில், ஒருவர் அடுத்த பத்து ஆண்டுகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்றால், உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புக்கு முன்னர் அவர் EPF இல் இருந்து பெற்றிருக்கக் கூடிய தொகை 3 மில்லியன் ரூபாய்களாகும், ஆனால், மறுசீரமைப்பு திட்ட அமுலாக்கத்துக்கு பின்னர் அவர் பெறும் தொகை 2.1 மில்லியன் ரூபாய்கள் மட்டுமே. அதாவது அவர்களுடைய எஞ்சிய வாழ்நாளைக் கழிப்பதற்காக அவர்கள் நம்பியிருந்த ஓய்வூதியம் பெருமளவு குறைந்து போகும். ஓய்வூதியத்தை சேமிப்பதற்காக தமது நாளாந்த தேவைகளை தியாகம் செய்யும் தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் ஆடைத் தொழிலாளர்கள் போன்ற மிகவும் ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களுக்கு இது பேரழிவை ஏற்படுத்தும்.

### மாற்று திட்டங்கள்

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.5% என்பது வரவு செலவுத் திட்டத்தின் 3.3% ஆகும். அதனை செல்வந்த வரிகளை உயர்த்துவதன் மூலம் அரசாங்கம் பெற்றிருக்கலாம். இதனால் உழைக்கும் மக்களின் ஓய்வூதிய நிதிகள் பாது

காக்கப்பட்டிருக்கும். மேலும் IMF நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யத் தேவையான நிதியை செல்வந்தர்களிடம் இருந்து அறவிட்டிருக்க முடியும். அந்த நடவடிக்கைக்கு தேவைப்பட்டிருக்கக் கூடியது செல்வந்த வரியிலிருந்து கிடைக்கும் வருவாயில் 3.3% அதிகரிப்பு மட்டுமே.

மேலும், கடன்களை திருப்பி செலுத்த அரசாங்கத்துக்கு தேவைப்படும் நிதியில் (GFN) தோராயமாக மூன்றில் ஒரு பங்கு, அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.5% ஆனது, வெளிநாட்டுக் கடன்களை செலுத்து தலுக்கானது. ஆகவே வெளிநாட்டுக் கடன் வழங்குனர்களிடம் இன்று கோரப்படும் 30% கடன் தள்ளுபடியை விட அதிக கடன் தள்ளுபடியை அரசாங்கம் கோர வேண்டும். அதனை IMF மத்தியஸ்தம் செய்ய வேண்டும். ஆனால் IMF உலகளாவிய நிதி நிறுவனங்களின் நலன்களுக்கு உடந்தையாக இருக்கிறது. அரசாங்கமும் அவர்களின் நிபந்தனைகளை எந்த விதமான மறுபேச்சும் இன்றி ஏற்றுக் கொள்கிறது.

இவை எல்லாவற்றுக்கும் மத்தியில், உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு என்பது நாங்களாக தன்னார்வத்துடன் செய்வது என்று மத்திய வங்கி ஆளுநர் கூறுகிறார். ஆனால் ஓய்வூதிய நிதியங்கள் கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ள விரும்பவில்லை என்றால், அவை மீது அபராதம் விதிக்கப்படும் என மத்திய வங்கி ஆளுநர் அச்சுறுத்துகிறார். இது அவற்றின் மீதான வரியை 14% இலிருந்து 30% ஆக உயர்த்தி, வருமானத்தை 9% லிருந்து 7% ஆகக் குறைக்கும். ஆகவே, உழைக்கும் மக்களைப் பொறுத்தவரையில், இப்போது அரசாங்கம் உள்நாட்டு கடனை மேம்படுத்துவது (Domestic Debt Optimization, DDO) என்று அழைப்பது உண்மையில் உள்நாட்டுக் கடன் தள்ளுபடியே (Domestic Debt Dispossession)! உழைக்கும் மக்கள் இத்தகைய உடைமைப் பறிப்பை நிராகரிக்க வேண்டும். முடிந்தால் அவர்களின் ஓய்வூதிய நிதிக்கு வரி விதித்துப் பார் என்று அரசாங்கத்துக்கு சவால் விட வேண்டும். இந்த பாராளுமன்றம் சட்ட விரோதமானது என்ற அடிப்படையில், 'பிரதிநிதித்துவம் இல்லாமல் வரிவிதிப்பு இல்லை!' என்ற முழக்கத்தை அவர்கள் கையிலெடுக்க வேண்டும்.

---

(10 ஆம் பக்க தொடர்ச்சி)

ஆகவே மலையக மக்களினுடைய நிலைமைக்கு இலங்கை அரசாங்கம் மட்டும் காரணம் இல்லை. இந்திய அரசாங்கம், பிரித்தானிய அரசாங்கம் எல்லாருமே காரணம். ஆகவே அவர்களிடமும் நீதி கேட்க வேண்டிய தேவை மலையக மக்களுக்கு இருக்கிறது. சிறீமா-சாஸ்திரி ஒப்பந்தம் ஒருவகையில் இன அழிப்பு தான். ஒரு பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின் இருப்பை அழிப்பது என்பதும் இன அழிப்பு தான். அவர்களுடைய அரசியல் தளத்தை அழிப்பதுவும் இன அழிப்பு தான். இது ஒரு பச்சையான இன அழிப்பு தான் என்று சொல்ல வேண்டும்.

**குறிப்பு 1.**

1919 ஆம் ஆண்டு உருவாகிய இலங்கை தேசிய காங்கிரஸ் (Ceylon National Congress) இல் தொடக்கத் தலைவராக பொன் அருணாச்சலமும் ஆரம்பகால உறுப்பினர்களில் ஒருவராக பெரியண்ணன் சுந்தரமும் (பெரி சுந்தரமும்) இருந்தனர்.

**குறிப்பு 2.**

கோதண்டராம நடேச ஐயர் இலங்கை தொழிற் சங்கத்தின் உப தலைவராக இருந்தவர். இலங்கையின் அப்போதைய சட்டவாக்கச் சபையின் அங்கத்தவராக தெரிவு செய்யப்பட்டவர். இலங்கை தொழிற் சங்கத்தின் தலைவராக இருந்த இலங்கைத் தொழிற் சங்கத்தின் தந்தை என்று அழைக்கப்பட்ட A. E. குணசிங்க இலங்கையின் பிரச்சனைக்கு எல்லாம் காரணம் இந்தியத் தமிழரே என்று சொன்னதால் அதனை எதிர்த்து இவர் தொழிற் சங்கத்தை விட்டு விலகினார். விலகிய பின்னர் அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சம்மேளனத்தை உருவாக்கினார். மேலும் "The Indian Estate Labourer" (இந்திய தோட்டத் தொழிலாளர்) என்ற ஒரு ஆங்கிலப் பத்திரிகையையும் தொடங்கினார்.

**குறிப்பு 3.**

1939 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இலங்கை இந்திய காங்கிரஸிலிருந்து தான் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (CWC) 1950 ஆண்டு தோற்றம் பெற்றது. இதனை தோற்றுவித்தவர்கள் பெரி சுந்தரமும் ஜோர்ஜ் றோசாரியோ மோதாவும் ஆவார்கள்.

# உடல் உள ஆரோக்கியத்தை மேம்படுத்த நடைப்பயிற்சியே சிறந்த வழி – வழிகாட்டுகிறது புதிய வெளிச்சம்




> நடக்கும் போது ஏற்படும் மாற்றங்களை நாம் அறிவியல் ரீதியாக யோசித்துப் பார்த்தால் கழிவுகளை நீக்கக் கூடிய பயிற்சியில் முதல் இடம் நடைதான்

ஈழவன்

கனடாவை தளமாக கொண்டியங்கும் புதிய வெளிச்சம் அமைப்பு வருடாந்தம் நடாத்தி வரும் ஆரோக்கிய நடை பயணம் (ekuruvi steps 2023) இம்முறை மதிப்புக் கூட்டல் என்கிற தொனிப்பொருளில் இடம்பெற்று வருகின்றது. இன்று இலங்கையிலும் சரி, கனடாவிலும் சரி எம்மவர்கள் மத்தியில் ஆரோக்கிய உணவுப் பழக்கம், போதிய தேகாப்பியாச பயிற்சிகள் இன்மையால் நீரிழிவு, உயர்குருதியமுக்கம் போன்ற தொற்றா நோய்களுக்கு ஆளாகி வருகின்றார்கள். அடிப்படையில் தினமும் நடைப் பயிற்சி பழக்கம் உள்ளவர்கள் மேற்படி நோய்களை தவிர்த்துக் கொள்ள கூடிய வாய்ப்புகள் உள்ளன. எந்த ஒரு செயலையும் இரண்டு மாதங்கள் தொடர்ச்சியாக செய்து வந்தால் அது பழக்கத்திற்கு வந்துவிடும் என்பது பொதுவான உண்மையாகும். இரண்டு மாதங்கள் தினமும் 10000 காலடிகள் நடந்து உலகெங்கும் உள்ள ஒவ்வொருவரும் தங்கள் உடல், உள ஆரோக்கியத்தை மேம்படுத்த வேண்டும் என்கிற கருதுகோளில் இடம்பெறும் இந்நிகழ்வை புதியவெளிச்சம் அமைப்பின் நிறுவனர் அனந்தராஜ் நவஜீவன் அவர்கள் சிறப்பாக ஒழுங்கமைத்து வருகிறார்.

நவஜீவன் நடைப்பயிற்சி தொடர்பில் கருத்து தெரிவிக்கையில், தினமும் நடைப் பயிற்சி என்பது மனித இயற்கை வாழ்வுக்கு மிகவும் அத்தியாவசியமானது. எங்களுடன் உலகம் முழுவதுமிருந்து சுமார் 300 தமிழர்கள் தினமும் 10000 காலடிகள் நடக்கின்றார்கள். நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் நண்பர்களையும் உறவுகளையும் இந்த நடை பயிற்சியில் இணைந்து கொள்ள அழையுங்கள். எம்முடன் இணைந்து நடை பயணத்தில் பயணிக்க விரும்புபவர்கள் தாராளமாக இணைந்து பயணிக்கலாம் என்றார்.

தமிழ் நாட்டின் பிரபல சித்த மருத்துவரும் எழுத்தாளருமான கு.சிவராமன் அண்மையில் கனடாவுக்கு விஜயம் செய்து ஆரோக்கிய நடையின் அவசியம் குறித்து பேசியிருந்தார். அதிலிருந்து சில பகுதிகள் வருமாறு: நம்முடைய உணவு, வாழ்வியல், அறிவியல் என்று அத்தனையிலும் மதிப்புக் கூட்ட வேண்டி உள்ளது. நடை என்பது வெறுமனே நடந்தால் உடல் எடை குறையும், நீரிழிவு நோய் கட்டுப்படும் என்பதற்காக மட்டுமல்ல, நடக்கும் போது ஏற்படும் மாற்றங்களை நாம் அறிவியல் ரீதியாக யோசித்துப் பார்த்தால் கழிவுகளை நீக்கக் கூடிய பயிற்சியில் முதல் இடம் நடைதான். எங்கள் உடலிலும் பல கழிவுகள் உள்ளன. மனதிலும் தான். நம் உடலில் நோயை எதிர்க்கும் ஆற்றலுள்ள பொறிமுறை இருக்கிறது. உளவியல் ரீதியாக தன்னையறிதலை நடை கொடுக்கிறது. எப்படி நடக்க வேண்டும் என்பதில் முதலில் நீங்கள் உங்களுடன் உரையாட வேண்டும். சிக்கலான விடயங்களில் எப்படி நகர்வது என்பதனை எனக்கு நடை கற்றுக் கொடுத்துள்ளது.

(20 ஆம் பக்க தொடர்ச்சி)

> **நாம் இன்னும் வளர்ச்சியடைய வேண்டும் முதலில் நாங்கள் தான் எங்களை வளப்படுத்திக் கொள்ள வேண்டும் மாற்றம் எங்களில் இருந்து ஆரம்பிக்க வேண்டும்**

பின்னர், பிரஜாவுரிமை வழங்கப்பட்டாலுமே கூட எங்களுக்கான உரிமைகள் தொடர்ந்துமே மறுக்கப்பட்டு வந்திருக்கின்றன. மலையகத்தில் இருப்பவர்களுக்கு வீடு இருக்கிறது. ஆனால் அந்த வீட்டுக்கான உரிமை அவர்களிடம் இல்லை, ஏனென்றால் மலையக மக்களுக்கு காணி உரிமை இன்றுமே வழங்கப்படவில்லை. மலையக சமூகம் ஓரளவுக்கு வளர்ச்சி அடைந்திருக்கிறது. அந்த வளர்ச்சி எங்கிருந்து வந்திருக்கிறது என்றால் ஒரு படித்த சமூகத்திற்குள் இருந்து வந்திருக்கிறது. அவர்கள் மலையக மக்களின் வளர்ச்சிக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று யோசிப்பவர்களாக இருக்கிறார்கள். ஆனால் அந்த படித்த எல்லோருமே அவ்வாறான மனநிலையில் இருக்கிறார்களா என்றால் இல்லை என்பது தான் எமது பதிலாக இருக்கும். மலையகத்தில் உள்ள பாடசாலைகளில் உள்ள அதிபர் ஆசிரியர்கள் மற்றும் வேறு வேறு தொழில் சார்ந்து வளர்ச்சி அடைந்தவர்கள் அனைவரும் சேர்ந்து கூட்டிணைந்து இயங்கும் போது அந்த துறை சார்ந்து மேல் எழும்ப வேண்டும் என்கிற சிந்தனைகள் வரும்.

எங்களுடைய மலையகத்தில் இன்றைக்கு இருக்கக் கூடிய அடிப்படை பிரச்சனைகளை இனங்கண்டு அதற்கு ஒரு தீர்வை நோக்கி பயணிப்பதற்கு அது வசதியாக இருக்கும். அதற்கு ஒரு விரிந்த சிந்தனை ஒன்று கட்டாயமாக இருக்க வேண்டும். அந்த சிந்தனையை வளர்த்தெடுப்பதற்கு எங்களுடைய தொடர்பாடல்களையும் எங்களுடைய அனுபவங்களையும் எப்போதுமே விரிவுபடுத்தி கொண்டே போக வேண்டும். நாங்கள் பல்கலைக்கழகத்திற்குள் வருகிறோம். அங்கு இருக்கின்ற பாடத்திட்டங்களில் ஒன்றை தெரிவு செய்து கொண்டு அதை மட்டுமே படிக்கிறோம். அதைச் சார்ந்தே சிந்திக்கிறோம். பட்டப்படிப்பை முடித்து விட்டு வெளியேறுகிறோம். அதற்கு பிறகு இந்த சமூகத்திற்கு நாம் படித்ததன் ஊடாக எதனை கொடுக்கிறோம்? நாங்கள் மட்டும் படித்து விட்டு ஒரு வளர்ச்சியடையாத சமூகத்திற்குள் இருக்கும் போது எம்மால் திருப்தியாக இருக்க முடியுமா? அல்லது எதிர்காலத்தில் வரக்கூடிய சந்ததியை பற்றிய என்னுடைய அக்கறைகள் என்ன? நான் படித்து விட்டேன், நான் வேலை செய்கிறேன் என்பது எனது சந்ததியை அடுத்த கட்டத்திற்கு எவ்வாறு நகர்த்தி கொண்டு செல்லும்? எனது பிள்ளைக்கு இந்த சமூகத்தில் தொடர்ச்சியான பாதுகாப்பும் சிறந்த வாழ்க்கை முறையும் கிடைக்குமா? என்பவை பிரதானமான கேள்விகள். இவ்வாறான கேள்விகளை அடுத்தடுத்து கேட்டுக்கொண்டு போகும் போது தொடர் நீட்சியான சிந்தனைகளையும் அதற்கேற்ற செயற்பாடுகளையும் முன்னெடுத்து செல்ல வேண்டும் என்கிற மனநிலை வரும். நாங்கள் மலையகத்திற்குள் இருப்பவர்கள் என்பதனால் எங்களுக்கு சொந்தமான இடம் இல்லை. காணி இல்லை. எங்களுடைய தேவைகளை பூர்த்தி செய்வதற்கான ஒழுங்குகளை செய்ய முடியாது. இந்த மாதிரி நிறைய பிரச்சனைகள் இருக்கின்றன. அந்த பிரச்சனைகளில் இருந்து விடுபடுவதற்கு என்ன வழிமுறைகள் இருக்கின்றன என்பதை ஆராய்ந்து அதை செயல்படுத்துவதன் மூலமாக நாங்கள் அடுத்த கட்டத்திற்குள் போக வேண்டும். இது தான் எமது எதிர்பார்ப்பாகவும் குறிக்கோளாகவும் இருக்கிறது.

தோட்ட தொழிலாளர்களுக்கு இன்றுவரை சரியான ஊதியம் வழங்கப்படாமல் இருக்கின்றது. சங்கங்கள், அமைப்புகள் எமது பிரச்சனைகளை கேட்டாலும் அவர்களிடமிருந்து தீர்வு எதுவுமே இன்னும் கிடைக்கவில்லை. நாம் இன்னும் வளர்ச்சியடைய வேண்டும். முதலில் நாங்கள் தான் எங்களை வளப்படுத்திக் கொள்ள வேண்டும். மாற்றம் எங்களில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். தொழில் கிடைக்கவில்லை, தொழிலுக்கு போதுமான ஊதியம் கிடைக்கவில்லை என்று நிறைய போராட்டங்களை செய்கிறோம். இவை குறிப்பிட்ட இடத்தோடு மட்டுமே முடிந்து விடுகின்றன. அதை எவ்வளவு பரவலடைய செய்ய வேண்டுமோ அந்தளவுக்கு அதில் நாங்கள் முயற்சியை எடுக்க வேண்டும்.

மலையக மக்களுக்கு வெளியில் இருந்து வருகின்ற பிரச்சனை என்ன என்று பார்த்தால் அது ஒடுக்கப்படுவது ஆகத்தான் இருக்கும். அதாவது சமத்துவமான இடத்தை எங்களுக்கு கொடுக்கிறார்கள் இல்லை. தமிழ் சிங்கள பாகுபாடு பெரும்பாலும் இருக்கிறது. சிங்களவர்களுக்கு தான் அதிகம் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். கல்வி, சுகாதாரம் என்று எந்த விடயத்தை எடுத்தாலும் கூட அங்கு சிங்கள சமூகத்திற்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். பாடசாலையை பொறுத்த வரையிலும் கூட சிங்கள நிகழ்வுகளுக்கு தான் அதிகமாக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். தமிழ் பிள்ளைகளை ஒதுக்கி வைக்கின்ற பாகுபாடு இருக்கிறது. மலையகத்தில் சிங்களம் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது கட்டாயமாக இருக்கிறது. தமிழ் தெரிந்தவர்களே சிங்களத்தில் தான் பேசுகிறார்கள். அதுமட்டுமில்லாமல் சிங்களவர்களுக்கு தான் முன்னுரிமை வழங்கப்படுகிறது. நாங்கள் தமிழ் மக்கள் என்பதால் கொஞ்சம் பின்தள்ளப்படுகிறோம். இன்றுவரையில் எங்களை ஒடுக்கப்பட்டவர்களாகவே வைத்துக் கொண்டிருப்பது நாங்கள் முகம் கொடுக்கின்ற பெரியதொரு பிரச்சனையாக இருக்கிறது.

எந்தவொரு விடயத்தையும் நாங்கள் உணர்வுபூர்வமாக யோசிக்கும் போது தான் ஒரு மாற்றத்தை கொண்டு வரலாம். எங்களது அரசியலில் சரியான அரசியல் தலைமைகளை நாங்கள் தெரிவு செய்யாததனால் தான் நாங்கள் இவ்வளவு கஷ்டப்படுகிறோம். மலையக மக்களாக நாங்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளில் மொழி சார்ந்த பிரச்சனை தான் அதிகப்படியாக இருக்கிறது. கேகாலை மாவட்டத்தை பொறுத்தவரையில் பெருமளவில் சிங்கள மக்கள் தான் இருக்கிறார்கள். அரச, தனியார் நிறுவனங்களிலும் பெரும்பாலான ஊழியர்களும் சிங்களவர்களாகவே இருக்கிறார்கள். ஏதாவது ஒரு சேவையை பெற்றுக் கொள்ளும் போது எங்கள் மக்களுக்கு பெரும் கஸ்டமாக இருக்கிறது. இதனால் பின்தள்ளப்படுகிறோம். கேகாலை மாவட்டம் மலையகத்தினுள் வரும் என்பதே எம்மில் பலருக்கு தெரியாமல் இருக்கிறது. இது எமக்கு ஆரம்பத்திலிருந்தே சொல்லிக் கொடுக்கப்படாத விடயம். எங்கள் பிரதேசங்களில் நாங்களும் ஒரு மலையக பிரஜைகள் தான் என்பதுவே தெரியாமல் இருக்கிறது. இது கவலைக்குரிய விடயம். மேலும், சம்பள பிரச்சனை வந்த போதும் பெருந்தோட்டம் என்று தேயிலையை முன்னிலைப்படுத்தி கதைக்கிறார்களே தவிர, இறப்பர் தொழிலாளிகளை பற்றி கதைப்பதே இல்லை. இதனை எந்த அரசியல்வாதிகளும் கதைப்பதாக இல்லை. அதேபோல மலையக மக்களுக்கு உள்ளே இருந்து வருகின்ற பிரச்சனை என்ன என்று பார்த்தால், முதலில் இருப்பது பொருளாதாரப் பிரச்சனை தான். நாங்கள் எங்கள் சமூகத்தில் இருந்து ஒப்பீட்டளவில் முன்னுக்கு வந்ததே பெரிய விடயம். ஏனென்றால் நிறைய பொருளாதார பிரச்சனைகள் இருக்கின்றன. சில நேரங்களில் நன்றாக படித்து ஆற்றலான நபராக இருந்தாலும் பல்கலைக் கழகம் செல்லக் கூடிய அல்லது உயர்கல்வி தொடரக்கூடிய வாய்ப்பு பிள்ளைகளுக்கு பெற்றுக் கொள்ள முடியாமல் இருப்பதற்கு வறுமையை காரணமாக சொல்லலாம். அப்படியான பின்னணியில் இருந்தும் இவ்வளவு தூரம் வெளியில் வந்திருக்கிறோம் என்பதே பாராட்டத்தக்க விடயம் தான்.

மாணவர்களாக இங்கு வருகிறோம், படிக்கிறோம், ஆனால் அந்த வட்டத்துக்குள்ளேயே இருக்க பார்க்கிறோம். வெளியில் சமூகத்திற்கு செய்ய வேண்டிய வேலைத்திட்டங்கள் நிறைய இருக்கின்றன. அதில் பங்குபற்றுதல் என்பது குறைவாகத் தான் இருக்கிறது. நாங்கள் எவ்வளவு தூரம் எமது சமூகத்தை முன்னேற்றுவதற்கான விடயங்கள் செய்ய முடியுமோ அந்த விடயங்களில் நாங்கள் இன்னும் கவனமாக இருக்க வேண்டும். எங்களுக்கான தனித்துவமான கலாசாரம் இருக்கிறது. எங்களுக்கான மொழிவளம் இருக்கிறது. இலங்கையில் உள்ள ஏனைய சமூகங்களை எடுத்து பார்த்தோமானால் அவர்களுக்கென்று ஒரு கலாசாரம் இருக்கிறது. அவர்களுக்கென்று மொழி இருக்கிறது. அவற்றை அவர்கள் பின்பற்றி வருகிறார்கள். ஆனால் எமது உரிமைகள் மறுக்கப்படும் போது எங்களது கலாசாரத்தை மாற்றி கொள்ள வேண்டும் என்று நினைக்கிறோம். எல்லா இடங்களிலும் புறக்கணிக்கப்படும் போது நாங்கள் என்ன யோசிப்போம்? இந்த கலாசாரத்தில் இருப்பதனால் தான் நாங்கள் புறக்கணிக்கப்படுகிறோம். ஆகவே நாங்கள் அதனை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று யோசிப்போம். எமது

மொழியை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று யோசிப்போம். எங்களது பிரதேசங்களிலே நிறைய பேர் பிள்ளைகளை சிங்கள மொழி, ஆங்கில மொழி பாடசாலைகளில் சேர்க்கிறார்கள். இதனால் தமிழ் மக்கள் மலையகத்தில் குறைந்து கொண்டே வருகிறார்கள். மேலும், மலையகத்திற்குள் இருக்கின்ற மாணவர்களும் சரி, மலையகம் சார்ந்த மாணவர்களும் சரி தங்களை நாங்கள் மலையகம் சார்ந்தவர்கள் என்று அடையாளப்படுத்துவதற்கே பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். இது ஒரு பெரிய பிரச்சனை. பல்கலைக்கழகத்திலும் எங்களது மலையக பிள்ளைகள் தம்மை மலையகம் சார்ந்தவர்கள் என்று சொல்வதற்கு வெட்கப்படுகின்றார்கள். இப்படியானவர்களால் வருங்கால சமூகத்திற்கு ஏதேனும் நல்லது நடக்குமா என்பது கேள்விக் குறியாகத் தான் இருக்கிறது. இவர்கள் தம்மை தாம் முன்னேற்றி கொண்டு போகிறார்களே தவிர, மலையக சமூகத்திற்கு இயன்றவற்றை செய்ய வேண்டுமென்ற உணர்வு யாரிடத்திலும் முழுமையாக வரவில்லை. அதேவேளை, மலையகத்தை சேர்ந்த மாணவர்கள் நாங்கள் எவ்வளவு தான் 3A சித்தி பெற்று வந்தாலும் கூட எங்களை இங்கு ஒரு பூச்சியமாக பார்க்கின்ற நிலைமை தான் இருக்கிறது. சிறுபான்மையாக ஒரு நாட்டில் இருப்பதே பெரிய சாபம். விரிவுரைகளின் போது கூட மலையகத்தை சேர்ந்தவர்கள் யாரும் இருந்தால் கையை தூக்குங்கள் என்று கேட்டால் யாருமே கை தூக்குவதில்லை. தங்களை தாங்களே அடையாளப்படுத்த கஷ்டப்படுகிறார்கள். இப்போது கல்வி கற்கின்ற மாணவர்களால் மாத்திரமே இந்த நிலைமையை மாற்ற முடியும். மேலும், மலையக தமிழ் மக்களினுடைய உரிமைகள் தொடர்ந்தும் மறுக்கப்பட்டே வருகின்றன. மலையக மக்கள் ஏதோ ஒரு அரசியல்வாதியின் பின்னால் போய் உரிமைகளை பெற்றுக் கொள்ளலாம் என்று நகர்கிறார்கள். எங்களது உரிமைகளை கேட்பதற்கான சரியான தளம் இல்லை. யாரை பின்பற்றினால் எங்களுக்கான உரிமைகளை பெற்றுக்கொள்ளலாம் என்பதற்கே சரியான வழிகாட்டல் இல்லை. நாங்கள் எங்களுக்கான உரிமையை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றால் சரியான தலைமைகளை தேர்ந்தெடுக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக எங்களுடைய உரிமைகளை அரசியல் யாப்பின் ஊடாக பெற்றுக் கொடுத்தாலுமே கூட அது நடைமுறையில் எந்தளவுக்கு சாத்தியமாக இருக்கிறது என்பது சந்தேகத்திற்கிடமாக காணப்படுகிறது. எங்களுக்கான உரிமைகள், எங்களுக்கான கலாசாரம், எங்களுக்கான மொழி எல்லாவற்றையுமே பின்பற்றுவதற்கான வாய்ப்புக்களும் சந்தர்ப்பங்களும் மலையகத்தில் குறைவாக இருக்கின்றன. எல்லா இடங்களிலுமே பெரும்பான்மை சமூகத்தின் ஆதிக்கம் அதிகமாக காணப்படுகிறது. ஆகவே மலையக மக்கள் தம்முடைய நிலைப்பாட்டை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமாக இருந்தால் தமக்கான சரியான தலைமைகளை தேர்ந்தெடுக்க வேண்டிய நிலைப்பாட்டிற்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

## வாசகர்களே!

நிமிர்வு இதழை **www.nimirvu.org** இணையமூடாகவும் சமூக ஊடக பக்கங்களான **facebook.com/nimirvu** என்ற முகநூல் ஊடாகவும் **youtube.com** இல் **nimirvu** என்று தேடுவதனூடாகவும் நிமிர்வு இதழின் அரசியல், சமூகம், பொருளாதாரம் குறித்த காணொளிகளையும் பார்க்க முடியும்.

இதுவரை வந்த நிமிர்வு இதழ்களை நூலகம் **(noolaham.org)** இணையத்தின் ஊடாக அதன் இதழ்கள் பகுதியில் மின்னூல் **(pdf)** வடிவில் வாசிக்க முடியும்.

# மாற்றத்தை விரும்பும் மலையக இளையோர்

தொகுப்பு - துருவன்

இலங்கை என்பது பல்லின பல கலாசாரம் கொண்ட நாடு. அதில் பகுதியான தமிழர்களாக வடக்கு கிழக்கினை சேர்ந்தவர்களும் மலையகத்தை சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். நாங்கள் வேறு வேறு நாடுகளுக்கு புலம்பெயர்ந்து போகின்ற போது அங்கு எங்களுக்குரிய அரசியல் உரிமைகளை அந்த நாடுகள் வழங்குகின்றன. அந்த நாட்டவர்களாக எங்களை உள்வாங்கிக் கொள்ளும் அதேவேளை எங்களுக்கான கலை கலாசாரத்தைப் பேணி நாங்கள் நாங்களாக வாழக் கூடிய வசதிகளை அந்த நாடுகள் வழங்கி இருக்கின்றன. ஆனால் இலங்கையில் 200 வருடம் பழமையை கொண்டவர்களாக மலையகத்தை சேர்ந்த மக்கள் அடையாளப்படுத்தப்பட்டு இருக்கிறார்கள். இந்த நாட்டில் தமிழர்களாக அவர்கள் வாழுவதற்கான வழிகள் தொடர்ச்சியாக மூடப்பட்டுக் கொண்டிருக்கும் சூழலைத் தான் நாங்கள் இங்கு காண்கின்றோம். இந்தப் பின்னணியில் நாங்கள் ஒவ்வொருவரும் அது சார்ந்த கலந்துரையாடலை நடத்த வேண்டும். இந்த நாட்டு மக்களாக மலையக மக்கள் சுயமாக வாழ்வதற்கு என்ன விடயங்கள் இருந்தால் நன்றாக இருக்கும் என்பதை ஆராய வேண்டும். அது தொடர்பான கருத்துகளை பகிர வேண்டும்.

அந்தவகையில் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் மலையகத்தை சேர்ந்த மாணவர்களின் தன்னார்வமான பங்கேற்புடன் மலையகம் 200 எனும் தொனிப்பொருளிலான நிகழ்வொன்று கடந்த 15.07.2023 சனிக்கிழமை, யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் உள்ள பண்பாட்டு மலர்ச்சிக் கூடத்தில் இடம்பெற்றது. பண்பாட்டு மலர்ச்சிக் கூடமும், சமூக விஞ்ஞான ஆய்வு மையமும் இணைந்து நடாத்திய இந்த நிகழ்வில் பல மாணவர்களும் தெரிவித்த கருத்துக்களின் தொகுப்பை இங்கு தருகிறோம்.

இலங்கையில் 1948 ஆம் ஆண்டு பிரஜாவுரிமை சட்டம் கொண்டு வரப்பட்ட போது தான் இந்திய வம்சாவழி மலையக மக்களுக்கு முதன் முறையாக நீங்கள் இந்த நாட்டின் மக்கள் இல்லை என்று சொல்லப்பட்டது. அந்த சட்டத்தின் மூலமாக நாடற்ற தமிழர்கள் எனும் நிலைக்கு எம்மை கொண்டு போகிறார்கள். மேலும், புலம்பெயர்ந்து வந்த சமூகத்தினர் என்று எங்களை அடையாளப்படுத்துகிறார்கள்.



(17 ஆம் பக்கம் பார்க்கவும்)

இந்த இதழானது தமிழ் ஊடகத் திரட்டு நிறுவனத்தினரால் 28.07.2023 அன்று வெளியிடப்பட்டது.